01.12.2025

O.S.No.208/2012

பி.வா.சா.1.திரு.விஜயபாபு, த.பெ.திரு.செல்லதுரை.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

பி.வா.சா.ஆ.9 ஆவணம் சட்டப்படி பதிவு செய்யப்படவில்லை என்பதாலும் போதிய முத்திரை கட்டணம் செலுத்தப்படவில்லை என்பதாலும் ஏற்றுக்கொள்ளக்கூடியது என்பது சரியல்ல. பி.வா.சா.ஆ.9 ஆவணம் மூலமாக எந்த ஒரு உரிமை மாற்றமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களில் உழவடை செய்துவந்தார், அனுவபம் செய்து வந்தார் என்பது சம்மந்தமாக உழவடை பத்திரமோ குத்தகை ரசீதோ உள்ளதா என்றால் குத்தகை ரசீது கொடுத்துள்ளோம். எந்த எந்த ஆண்டுகளுக்கு குத்தகை ரசீது கொடுத்துள்ளோம் என்று சொல்லமுடியுமா என்றால் எல்லா ஆண்டுகளுக்கும் கொடுத்துள்ளோம். மேற்படி ரசீதுகள் என் கைவசம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

பி.வா.சா.ஆ.10 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள குத்தகை ரசீதுகளில் மீனாட்சி சுந்தரம் என்பவர் கையெழுத்து போட்டு கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். மீனாட்சி சுந்தரம் என்பவர் தாவா சொத்துகளில் உரிமையாளரா என்றால் நில சுவான்தார் ஆவார். மீனாட்சி சுந்தரம் என்பவர் எந்த எந்த சர்வே எண்களுக்கு நில் சுவான்தார் என்று சொல்லமுடியுமா என்றால் சர்வே எண்.186/7,187/2 ஆக 2 ஏக்கர் 2 செண்ட் சொத்திற்கு நிலசுவான்தார் ஆவார். பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் எந்த பசலிக்கு எந்த சர்வே எண்ணுக்கு குத்தகை ரசீது வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தாவா வழக்கிற்கு பி.வா.சா.ஆ.10 ஆவணம் சம்மந்தம் இல்லாத ஆவணம் என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.11 ஆவணம் பட்டாதாரர் பெயருக்கு செலுத்தப்பட்ட கிஸ்து ரசீதுகள் என்றால் அழக்கப்பன் செட்டியாருக்காக செல்லத்துரை கட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நாங்கள் பேசிக் கொண்ட ஒப்பந்தத்தில் கிஸ்து ரசீது செலுத்த வேண்டுமென்று பேசிக் கொண்டாமா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.11 ஆவணத்தை வைத்து தாவா நிலங்களில் குத்தகைதாரர் என்று முடிவு செய்யமுடியாது என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.12 ஆவணம் சம்மந்தமாக யார் புகார் கொடுத்தது என்றது என்றால் பரமசிவம் புகார் கொடுத்தார். பரமசிவம் என்பவர் கொடுத்த புகார் அடிப்படையில் எங்களை ஆர்டிஓ விசாரணை செய்தார் என்றால் ஆமாம். மேற்படி விசாரணையில் அசல் வழக்கு நிலுவையில் இருந்துவருவதால் அசல் வழக்கு முடிவுக்கு உட்பட்டு நடந்துக் கொள்வதாக முடிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.12 ஆவணமும் எங்களுக்கு எந்த உரிமையும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்துக்களை வீட்டடிகளாக மாற்றுவதற்கு முறையாக அனுமதி வாங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா நிலங்களில் இன்று வரை உரிமையாளர் யார் பெயர் உள்ளது என்றால் துரைகண்ணு என்பவரது பெயரில் மொத்தம் சொத்தும் உள்ளது. துரைகண்ணு என்பவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் நாங்கள் துரை கண்ணு என்பவருக்கு கிரையம் கொடுத்தன் அடிப்படையில் பாத்தியப்பட்டது. எங்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் மீனாட்சி சுந்தரம் வகையறாவுக்கு பாத்தியப்பட்டு அவர்கள் எங்களுக்கு எழுதிக் கொடுத்தன் அடிப்படையில் பாத்தியப்பட்டது. எங்களுக்கு கிரையம் பத்திரம் உள்ளதா என்றால் உள்ளது. எந்த ஆண்டு கிரையம் பத்திரம் உள்ளதா என்றால் 2010 ஆம் ஆண்டு உள்ளது.

பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் உழவடை தாரராக யார் பெயர் உள்ளது என்றால் செல்லையா, த/பெ.கருத்தான் அம்பலம், நெண்டிகோவில் பட்டி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி உழவடைதாரர் சட்டப்படி காலி செய்யப்பட்டு

கிரையங்கள் கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். எதன் அடிப்படையில் காலி செய்யப்பட்டார் என்றால் வெண்ணிலை பத்திரம் மூலம் காலி செய்யப்பட்டார். வெண்ணிலை பத்திரம் 1978ஆம் ஆண்டு போடப்பட்டது. பதிவு செய்யப்பட்ட உழவடை வெண்ணிலையாக எழுதி வாங்கப்பட்டது சட்டப்படி செல்லாத என்றால் சரியல்ல. வெண்ணிலையாக செல்லையா என்பவர் எனது அப்பா செல்லத்துரைக்கு எழுதிக்கொடுத்தார். பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் நில உரிமையாளராக வள்ளியப்ப செட்டியார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி வள்ளிய்பப் செட்டியார் என்பரிடம் எழுத்துமூலமாக ஆவணம் எதுவும் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான் தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதியின் உழவடை அனுபவத்தில் உள்ளது என்றாலும் வாதியின் உழவடை உரிமையை மறைக்கும் முகமாக நாங்கள் வாதிக்கு எதிராக எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(திரு.P. மகாராஜன், எம்.எல்.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.